1972 டிசம்பர் 12]

பத்தாயிரம் ஏக்கர் நிலப்பரப்புக்கு மேல் தேவைப்படுகிறது. நல்ல தண்ணீர் வசதியும் இருக்க வேண்டும். இந்த நிபந்தனைக்குட்பட்டு வேறு இடம் இருப்பதாகக் கருதப்படுமாஞல், அது பற்றிக் கவனிக்கப்படும்.

Production of Khadi Cloth

*137 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon the Minister for Food be pleased to state the value of cloth produced by the Khadi Department in this State during 1971–72?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : ரூ. 198.17 லட்சங்கள்

திரு. என். கிட்டப்பா : உத்தமர் காந்தியார் வழிவந்தவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் உற்பத்தியான கதர்த் துணியின் அளவையும், விற்பனையான கதர்த் துணியின் அளவையும்விட, தென்னட்டுக் காந்தி பேரறிஞர் அண்ணு வழியில் வந்த டாக்டர் கலைஞர் ஆட்சியில் கதர் உற்பத்தி அதிகமாகி இருக்கிறதா? அதைப் போலவே விற்பனையும் அதிகமாகி இருக்கிறதா?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : விற்பனை அதிகம் என்ற அளவில் இல்லாவிட்டாலும் விற்பனை குறையாமல் இருக்கிறது. இதற்கு முன்பு விற்றது 80 சதவிகிதம் கடனுகவும் 20 சதவிகிதம் ரொக்கமாகவும் விற்கப்பட்டது. இப்போது கடனுக விற்பதைக் குறைத்து ரொக்கமாக விற்பதை அதிகப்படுத்தியிருக்கிறோம். ஆகவே, இப்போது உற்பத்தியும், விற்பனையும் ஓரளவு சீராக இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : கதர்த் தொழிலுக்கு ஆக்கம் கொடுக்கின்ற வகையில் இந்த இலாக்காவை ஏற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கதர்த் துணியை அணிந்து இந்த நாட்டுக்கு வழி காட்டுவார்களா?

மாண்புமிகு மன்னை. திரு. ப. நாராயணசாமி : முழுக்க முழுக்க கதர் கட்டிக் கொண்டிருந்தவன் நான். அண்ணு அவர்கள் கைத்தறித் துணியைக் கட்ட வேண்டுமென்று சொன்ன பிறகு, கடந்த பத்தாண்டுகளாக கைத்தறியையும், கதரையும் கலந்து கட்டுகிறேன். பாதி அளவு கைத்தறியும், பாதி அளவு கதரும் கட்டி வருகிறேன்.

திரு. ந. தருமலிங்கம் : மில் துணிகளிலும், பட்டு வேட்டிகளிலும் அகலமாக கறுப்பு சிவப்பு கரை போட்ட வேட்டிகள் வருவது போல் கதர் வேட்டிகளிலும் அந்த மாதிரி கரை போட்ட வேட்டிகள் உற்பத்தி செய்யப்படுமா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : இப்போது யார் யார் என்ன விரும்புகிறார்களோ அந்தந்தக் கலரில் போடும் முயற்சி நடந்து வருகிறது.

New hotel at Mahabalipuram.

*115 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Tourism Development Corporation has proposed to construct a new hotel at Mahabalipuram with all modern amenities; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(ஆ) மகாபலிபுரத்தில் நல்ல வசதிகள் அடங்கிய ஒரு ஓட்டலைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. உணவு விடுதி, ஸ்விம்மிங் பூல், டார்மிட்டரி பிளாக் ஆகியவை இணைந்திருப்பதற்கான ஏற்பாடுகளும் உள்ளன.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சமீபகாலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு வரக்கூடிய கூட்டத்தைப் பார்க்கும்போது அதுவே ஒரு சுற்றுலாக் கேந்திரமாக மாறிவிட்டதுபோல் இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு நவீன ஓட்டல், ஸ்விம்மிங் பூல், விளையாடுவதற்கான இடம் ஆகியவற்றை எல்லாம் உருவாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சட்டமன்ற விடுதிக்கு அருகில் கூவம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இந்தியாவிலேயே இல்லாத பெரிய "ஸ்விம்மிங் பூல்" கட்டப்பட்டுள்ளது. அதை அங்கத்தினர் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS